## இலங்கை கலைகள் மன்றம் - 2014

இலங்கை கலைகள் மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 44 ஆம் இலக்க இலங்கை கலைகள் மன்ற (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் (அதி 278) 15(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு (ISSAI 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கின் ஊடாக போதியளவான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளாமை

கலைகள் மன்றத்தின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி முதல் 3 வருடங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடம் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில்

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த வாடகை முற்பணமாக கலை கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,740,000 தொகையும் மீளாய்வாண்டிற்காக கட்டிட வாடகையாக அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 870,000 தொகையும் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு செயற்பாட்டில் முறையாக பேணப்படுகின்ற பேரேட்டுக் கணக்குகளைக் கொண்டே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு உறுதிச்சீட்டுக்களையும் பற்றுச்சீட்டுக்களையும் வகைப்படுத்துதல் மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் உள்ளடக்கப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கல்கள் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படாமல் சீராக்கம் மேற்கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இவ்வாறான நிலைமையின் கீழ் சகல கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடக்கப்பட்டதா என்றும் உரிய சீராக்கங்கள் முறையான அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டதா என்பதும் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஆ) நடப்பாண்டில் தீர்க்கப்படாத முற்பணம் காணப்படாத போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணமாக ரூபா 20,000 நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு எஞ்சியிருந்த கலைகள் மன்றத்தால் அறிவிக்கப்பட்ட ரூபா 468,877 கிரயமான மூன்று புத்தகங்களில் 961 பிரதிகள் மற்றும் 766 கலை சஞ்சிகைகள் இருப்பின் கிரயம் என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சரின் தேவைக்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 57,648 கிரயமான 151 புத்தகங்கள் மற்றும் 73 கலை சஞ்சிகைகள் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் விற்பனை செய்யப்பட்டதும் பணம் அனுப்பும் அடிப்படையில் 5 வெளி நிறுவனங்களுக்கு 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 3 புத்தகங்களின் 150 பிரதிகளுக்காக உரிய பணம் அறவிடப்படாதிருந்த போதிலும் அந்தப் புத்தகங்கள் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கலை சஞ்சிகைகளை அச்சிடுவதற்காக அச்சிடல் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 148,589 தொகை அட்டுறு செலவினமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 3 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட விழா முற்பணம் ரூபா 15,000 தொகை பிழையாக வருமானச் செலவினக் கணக்கில் பதிவழிக்கப்பட்டமையால் ஆண்டின் செலவினம் ரூபா 15,000 இனால் அதிகரித்திருந்ததுடன் மூன்று பதவியணியினர்களிடமிருந்து அறவிடப்பட்ட விழா முற்பணத் தவணைப்பணம் சம்பளக் கணக்கிலும் கடமைப் படிக் கணக்கிலும் உள்ளடக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் கடமைப் படிச் செலவினம் ரூபா 14,000 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நடப்பாண்டின் 04 செலவின விடயங்களுக்குரியதாக செலவிடப்பட்ட ரூபா 328,004 தொகையான செலவினங்களைச் செய்தல் உரிய பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 30,336 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வட்டி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நடப்பாண்டிற்காகக் கிடைக்கவேண்டிய ரூபா 20,733 தொகையான வட்டி வருமானமொன்று மீளாய்வாண்டின் வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி நடப்பாண்டின் வட்டி வருமானம் ரூபா 9,603 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் கிடைக்கவேண்டிய வட்டி வருமானம் ரூபா 20,733 தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | 2005 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியின் இரண்டு உத்தியோகத்தர்களுக்காக இந்த அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி 2005 ஆம் ஆண்டு முதல் பணிக்கொடைக்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1985 இன் 01 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய திருத்த அதிகாரச்சட்டம் | ஊழியர்களின் சம்பளத்தையும் ஏனைய படிகளையும் அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதி கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதி கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் படி 05 உத்தியோகத்தர்களிடமிருந்து சேமலாப நிதி ரூபா 62,834 தொகை குறைத்து அனுப்பப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை VI ஆம் அத்தியாயத்தின் 5.1 ஆம் பிரிவு | பதவியணியின் ஆளணிக் கோவைகள் பதவிநிலைத்தர உத்தியோகத்தரின் பொறுப்பில் பாதுகாப்பாக பேணப்பட வேண்டிய போதிலும் கலைகள் மன்றத்தின் பதவியணியினரின் ஆளணிக் கோவைகளின் பொறுப்புத் தன்மையும் பாதுகாப்பும் தொடர்பில் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ)(இ) | பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்த்தல் உரிய செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 10 உத்தியோகத்தர்களினால் 18 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதியில் எஞ்சிய ரூபா 95,860 தொகையை தீர்ப்பதற்காக 32 முதல் 75 நாட்கள் வரையிலான காலம் எடுக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| | பதவிநிலைத்தரமல்லாத 10 உத்தியோகத்தர் களினால் 19 சந்தர்ப்பங்களின் போது ரூபா 20,000 இனை விஞ்சி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த செயல்நிமித்த உப கட்டுநிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 869,390 ஆகும். |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 அல்லது அதற்கு கிட்டிய தினத்தில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் படி நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் கணனிச் சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உபமன்றங்களின் குழுக்கூட்டத்திற்காக உபமன்றங்களின் செயலாளர் உதவிச் செயலாளர், அலுவலக உதவியாளர் மற்றும் கலை மன்றத்தின் செயலாளர் உதவிச் செயலாளர் மற்றும் அலுவலக உதவியாளர் போன்ற உத்தியோகத்தர்கள் உபமன்றங்களின் குழுக் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்கு படியாக ரூபா 197,800 மொத்தத் தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிரந்தர ஊழியர்களான இந்த உத்தியோகத்தர்களுக்கு மேலதிக படி செலுத்துவதற்காக தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு மற்றும் 1999 மே 04 ஆந் திகதிய 374 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி தாபனப் பணிப்பாளரினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1952 இன் 18 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தில் இலங்கை கலைகள் மன்றத்தை உருவாக்கும் நோக்கத்தின் கீழ் வெளிநபர்களுக்கு நன்கொடை மற்றும் உதவியாக அனுசரணையாளர்களைக் காண்பிக்கக்கூடியமைக்கு ஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பரிசு மற்றும் உதவிகளை வழங்குவதற்காக மன்றத்தினால் ரூபா 345,000 செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக எவ்வித நியதி அடிப்படையோ அல்லது கொள்கையொன்றோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 265,829 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக அதற்கு நேரொத்த பற்றாக்குறை ரூபா 241,052 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 24,777 தொகையான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 858,665 இனால் அதிகரித்திருந்த போதிலும் மொத்தச் செலவினம் ரூபா 883,442 இனால் அதிகரித்திருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மன்றத்தினால் மீளாய்வாண்டிற்கான பௌதீக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் நிதி செயலாற்றல் அறிக்கையின்படி மீளாய்வாண்டின் போது ரூபா 2,750,000 தொகை செலவில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 9 நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி செயல்முன்னேற்றம் பூச்சியமாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மார்ச் மாதத்தின் போது வரியப்பொலயில் நடைபெற்ற உள்நாட்டுக் கலைஞர்களை இணங்காணல் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொணரும் செயலமர்வின் போது படங்களை எடுத்தல் மற்றும் வடமேல் மாகாணத்தின் கலைஞர்களின் பெயர்ப்பட்டியலொன்றைத் தயாரிப்பதற்காக ரூபா 83,598 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கலைஞர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரிக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சில்லறைக் காசு கட்டுநிதி அன்றன்றைக்கு ஏற்படுகின்ற சிறிய பெறுமதிகளையுடைய அவசர தேவைச் செலவினங்களைச் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் மன்றத்தினால் மாதாந்த நீர்க்கட்டணப் பட்டியலும் சில்லறைக்காசு கட்டுநிதி மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்காக எழுத்து மூல கடமை கையளித்தல்கள் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தென் கொரியாவில் நடைபெற்ற நடனக் குழுக் கூட்டத்திற்காக பங்கு பற்றிய நாடக உப மன்றத்தின் அங்கத்தவர்கள் இருவரினதும் அமையச் செலவினப் படியாக ரூபா 74,600 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த மதிப்பீட்டிலோ அல்லது செயல்நடவடிக்கைத் திட்டத்திலோ நிதியேற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கலைகள் மன்றத்தின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதத்தில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தின் மொத்தப் பரப்பளவு 3200 சதுர அடியாக இருந்ததுடன் 830 சதுர அடி அளவிலான இட அளவொன்று எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.5 நோக்கத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சரின் வாழ்த்துத் தெரிவிக்கும் விழாவிற்காக பாடலொன்றை இயற்றுதல், சங்கீதம் மற்றும் அரங்கேற்றுவதற்காக மன்றத்தால் ரூபா 48,300 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அமைச்சரின் இணைப்புச் செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் 2 செயலமர்வுகளுக்காக தண்ணீர் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 34,384 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.6 பதவயிணியினர் நிருவாகம்

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட 6 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனிடையே பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (மன்றத்தின் செயலாளர்) பதவிக்காக

நிரந்தர உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2 வருடங்கள் அளவிலான காலம் முதல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவர் பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு (புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்)
(இ) மன்றத்தின் கூட்டங்களும் உபமன்றங்களின் குழுக் கூட்டங்களும்